12.03.2026

**OS** **125/2022**

பி.வா.சா. 3 திரு. ரவி **த/பெ** பெருமாள்

**வாதிதரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் தார்சு வீடு உள்ளது என்றால் சரிதான். தார்சு வீட்டிற்கான வீட்டு வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது வாதி மாலதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வாதிதான் மேற்படி தார்சு வீட்டில் தற்போது வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்து நஞ்சையா அல்லது புஞ்சையா என்றால் நஞ்சை நிலம் ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 ½ செண்ட் ஆகும். தாவா சொத்திற்கு நான்கு மால் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. வாதி மாலதி தாவா சொத்தினை கிரையம் முடித்தது குறித்த கிரைய பத்திரம் குறித்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும். தாவா சொத்திற்கு அருகே உள்ள இடத்தில் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி சொத்தினை வாதி கிரையம் முடித்தற்கு பின்பு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் கண்ட சொத்திற்கான நான்கு மாலில் ஒரு நான்கு மால் வாதி மாலதி கிரையம் பெற்ற சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி தந்தைக்கு ஊரில் பூர்வீக சொத்து உள்ளதா என்றால் உள்ளது. வாதி பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளார் என்றால் வீடு கேட்டு வழக்கு போட்டுள்ளார். நகை திருடு போனதாக சொல்வதில் எந்த வருடம் எங்கு திருடு போனது என்றால் இரண்டு வருடத்திற்கு முன்பு பிரதிவாதி வீட்டில் திருடு போனது. நான் வெளிநாட்டில் எத்தனை வருடங்கள் வேலை பார்த்தேன் என்றால் இரண்டு வருடம் வேலை பார்த்தேன். பிரதிவாதியிடம் நான் வட்டிக்கு பணம் வாங்கியுள்ளேன் என்றால் பிரதிவாதியிடமும் வாங்கியுள்ளேன் அவரது தந்தையிடமும் வாங்கியுள்ளேன். பிரதிவாதியிடம் நான் கடனாக பணம் பெற்றுள்ள காரணத்தினால் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்ததால் தாவா வழக்கு பற்றிய விபரம் முழுமையாக தெரியாது என்றும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.12 17:01:05 +0530